**1894**

124 வது ஆண்டை நோக்கி....

# அளவெட்டி அருணோதயாக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் - கொழும்பு கிளை

## அங்குரார்ப்பணம் 2010 .06.20

திரு திருமதி செல்வி : ..............................................................................................

ஒன்பதாம் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிறுவுனர் நிறைவுப் பேருரையும்

இடம் :

கொழும்பு தமிழ்ச்சங்கம் - சங்கரப்பிள்ளை மண்டபம்

இலக்கம் : 07, சங்கம் ஒழுங்கை, வெள்ளவத்தை.

காலம் :

**2018.09.30 ஞாயிற்றுக்கிழமை - மாலை: 04.00 மணி.**

தலைவர் : திரு. ந. சிவபாதன்

(தலைவர் - பழையமாணவர் சங்கம் - கொழும்பு கிளை)

பிரதம விருந்தினர் :

திரு. பொ. சுந்தரலிங்கம்

(சிரேஷ்ட சட்டத்தரணி, யாழ் மாவட்டம், பழைய மாணவர் - அருணோதயக்கல்லூரி)

சிறப்பு விருந்தினர்கள் :

திரு. சு. ஜெயச்சந்திரன்

(அரச அங்கிகாரம் பெற்ற ஓவிய கட்டிடக் கலைஞர், கொழும்பு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்)

திருமதி. திருமகள் இராமச்சந்திரன்

(ஓய்வுநிலை உதவி கல்வி பணிப்பாளர், மாத்தளை கல்வி வலயம், கொழும்பு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்)

திரு. வி. செல்வரத்தினம் (ஓய்வு நிலை விஞ்ஞான ஆசிரியர்)

(அகில இலங்கை சமாதான நீதவான், மத்தியஸ்தர். J.P, பழைய மாணவர் - அருணோதயக்கல்லூரி)

# நிகழ்ச்சி நிரல்
***************

1. மங்கள விளக்கேற்றல்
2. நிறுவுனர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து விளக்கேற்றல்
3. விருந்தினர்களை மேடைக்கு அழைத்தல்
4. தேவாரம்:– திரு. செ. ஞானசொருபன் சங்கீத ஆசிரியர் யா / வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் (கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர்)
5. மௌன அஞ்சலி
   அமரத்துவம் அடைந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாராஊழியர்கள், பழையமானவர்கள்
6. வரவேற்பு உரை : திரு. செ. சனந்தன் விஞ்ஞான ஆசிரியர் யா / ஹென்றிஸ் கல்லூரி இளவாலை (பழைய மாணவர் – அருணோதயாக்கல்லூரி)
7. தலைமை உரை : திரு. ந. சிவபாதன்
8. பிரதம விருந்தினர் அவர்களை பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தல்
9. சிறப்பு விருந்தினர் அவர்களை பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தல்
10. பிரதம விருந்தினர் உரை
11. சிறப்பு விருந்தினர்கள் உரை
12. செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல் : திரு. க. நித்தியானந்தம் (செயலாளர் கொழும்பு பழைய மாணவர் சங்கம்)
13. பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தல் : திரு. சிவயோகநாதன். (பொருளாளர் கொழும்பு பழைய மாணவர் சங்கம்)
14. 2018–2019 க்கான 9வது நிர்வாக சபைத் தெரிவு
15. 9வது நிர்வாக சபைக்கான வாழ்த்துரை : திரு. நா. கேதீஸ்வரன் (அதிபர் – அருணோதயாக்கல்லூரி)
16. அங்கத்தவர்களின் கருத்துக்கள்
17. செயளாலரின் நன்றியுரை
18. கல்லூரி கீதம்
19. இராப்போசனம்.

நிகழ்ச்சித் தொகுப்பாளர் : திரு. ஜெ. கலைச்செல்வன்
(உப செயலாளர் கொழும்பு பழையமாணவர் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் :

திரு. க. நித்தியானந்தம்
(செயலாளர் கொழும்பு பழைய மாணவர் சங்கம்)

**வாழ்க வளர்க அருணோதயா**
******************************

# ஒன்பதாம் ஆண்டு பொதுச் சபை கூட்டமும் 2017-2018 இற்கான எட்டாம் ஆண்டு அறிக்கையும் 2017-09-10 முதல் 2018-09-29 வரை

அன்பு, அடக்கம், பண்பு, நேர்மை, இறைபக்தி போன்ற உயர்வான குணங்களை கொண்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதே இன்றைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது என்பதனைக கருத்திற்கொண்டு தலைவர் அவர்களே! பிரதம அதிதி அவர்களே! சிறப்பு விருந்தினர்களே, வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்திருக்கும் பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே! எட்டாம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்களே! உங்கள் அனைவரையும் இன்றைய மாலை வேளையில் அன்புடன் வரவேற்று எனது மாலை வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

கடந்த ஆண்டு நடைபெற்ற எட்டாவது பொதுச்சபைக்கூட்டத்தின் போது அனைவருக்கும் மதியபோசனம் அளித்து கௌரவித்ததோடு, நிறுவுனர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு விளக்கு ஏற்றி, மாலை அணிவித்து வணக்கம் செலுத்தி நிகழ்வை ஆரம்பித்தோம் இன்றைய ஒன்பதாவது பொதுச்சபை கூட்டத்தில் முதல் முறையாக நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளோம் இது ஒரு முழுமை பெற்ற நிகழ்வாக அமைந்துள்ளது. இவை அனைத்தும் சிறப்புற அமைவதற்கு உறுதுனையாக இருந்து செயற்படுபவர்கள் கொழும்பு பழையமாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களே அவர்களுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்வை சிறப்பிக்க வந்திருக்கும் பிரதம அதிதியும் மாவட்ட சிரேஸ்ட சட்டத்தரணியும் ஆகிய திரு. பொ.சுந்தரலிங்கம் அவர்கள் எமது கல்லூரியினர் மூத்த பழைய மாணவர் ஆவர். அவர் தனது ஆரம்பக் கல்வியை சதானந்த வித்தியாலத்திலும் கொழும்பு 2 சிலேவ் ஐலண்ட (கொம்பனி தெரு) முஸ்லிம் சீனியர் உயர்தரபாடசாலையிலும்.

3ம் வகுப்பில் இருந்து க.பொ.த சாதாரண தரம்வரை அளவெட்டி அருணோதயபக் கல்லூயிலும் கற்று உயர்தரகல்வியை சுண்ணாகம் கந்தரோடை ஸ்கந்த வரளோகயர் கல்லூரியிலும் கற்றார். தொடர்ந்து கொழும்பு பல்கலைகழகத்தில் LLB பட்டத்தை வெளிவாரியாக கற்று சட்டமானி பட்டத்தை பெற்றுக கொண்டார். 1998இல் இருந்து யாழ்மாவட்ட நீதிமன்றங்களில் சிறந்த சட்டத்தரணியாக தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார்.

அத்துடன் காணி உறுதி எழுதுவதிலும் தனது திறமையை காட்டி வருகின்றார். பொதுவாகவே அவர்தனது வாழ்க்கைப் பயணத்தில் அமைதியாக வாழ்ப்பவர் தனது பணியை மிகவும் நேர்மையுடனும் அர்பணிப்புடனும் கடமையாற்றி வருபவர் தொழில் நேர்மை காரணமாக பெருபாலானவர்களால் அவர் மதிக்கப்படுகின்றார். காணி உறுதி எழுதும் விடயத்தில் யாருக்கும் எந்தசிக்கல்

வராதவாறு நிதானமாக நடந்து கொள்வார் அவரது துணைவியாரும் அளவெட்டியை சேர்ந்தவர்கள் துணைவியாரும் அவரது சகோதரர்களும் அருணோதயாக கல்லூரியின் பழைய மாணவர்கள் அவர்களுக்கு இருபுதல்விகள் உண்டு இருவரும் சிறந்த முறையில் உயர்கல்வியை கற்று திருமணம் முடித்து சந்தோஷமாக வாழ்க்கிறனர். கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பை ஏற்று பிரதம அதிதியாக கலந்து கௌரவித்தமைக்கு பழைய மாணவர்கள் சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்க வந்திருக்கும் திரு. சு. ஜெயசந்திரன் அவர்களும் ஒரு மூத்த பழைய மாணவன் ஆவர் அவர் தனது ஆரம்பக்கல்வியை சதானந்த வித்தியாசலையிலும் தரம் 5முதல் க.பொ.த. சாதாரணம் வரை அளவெட்டி அருணோதயாக கல்லூரியிலும் கற்றார். அருணோதயாக் கல்லூரியில் கற்ற காலத்தில் கற்றலில் முதன்மை மாணவனாகவும் முக்கியமாக கேத்திர கணித வரைதல் பாடத்தில் மிகத்திறமைக் காட்டி பல ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றவர் பாடசாலையில் சாரணர் இயக்கத்திலும் தனது பணியை சிறப்பாக செய்தவர் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்த பின்னர் யாழ்ப்பாண பாடசாலை தொழில்நுட்ப கல்லூரியில் (School of Technology in Jaffna) நில அளவை பயிற்சி (Survior) சிறப்பாக கற்று நில அளவை திணைக்களத்தில் அரச அங்கிகாரம் பெற்ற நிலஅளவை ஓவிய கலைஞர் ஆகபல காலம் பணியாற்றினார். சிலகாலம் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்திலும் பணியாற்றினார். ஓய்வுகாலத்தில் வெளிநாடுகளும் சென்று சிலகாலம் வாழ்ந்தவர். ஓய்வுக்காலத்திலும் வீணாக காலத்தை செலவழிக்காது தனிப்பட்ட முறையில் தொழிலை செய்து வருகின்றார். நாம் முதல் முதலாக 2010இல் கொழும்பில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை ஸ்தாபித்த போது தானும் அங்கத்தவராக சேர்ந்து நிர்வாக சபை உறுப்பினராக கடமையாற்றினார்.

அவரின் துணைவியார் அளவெட்டியை சேர்ந்தவர். அமரர் மாணிக்கம் பண்டிதர் அவர்களின் புத்திரியாவர். இவர்களுக்கு 2 மகன்மாரும் ஒருபுதல்வியும் உண்டு எல்லோரும் சிறப்பாக உயர்நிலை கல்வியை கற்று தேறியுள்ளனர். மூத்த புதல்வன் லண்டனில் பொறியில் பட்டம் பெற்று உயர்பதவியில் உள்ளார். அவருக்கு ஒரு ஆண்மகனும் ஒருபெண்மகளும் உண்டு. அவருடைய புதல்வி கணக்காளர்பட்டம் பெற்று லண்டனில் வாழ்ந்து வருகின்றார். அவருக்கு ஒரு மகன் உண்டு இளைய மகன் Software Engineering பட்டம் பெற்று அமெரிக்கன் கம்பனியில் கடமையாற்றுகின்றார். திரு ஜெயசந்திரன் அவர்கள் யாழ்மண்ணில் வசித்த காலத்தில் பொதுச் சேவையில் ஈடுபாடு கொண்டவர் அந்தவகையில் அளிவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில் தொண்டர்சபை செயலாளர்கக கடமை ஆற்றியவர். அழகொல்லை விநாயகர் ஆலயத்தில் தொண்டர் சபைத்தலைவராக கடமையாற்றியவர். வீதி அபிவிருத்திசபை (RDS) இல் செயலாளராக கடமையாற்றியவர். கொழும்பு பழைய மாணவர்சங்கதின் அழைப்பை பெற்று சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தமைக்கு பழைய மாணவர் சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கின்றோம். அடுத்த சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்க வருகை தந்திருக்கும் திருமதி திருமகன் இராமச்சந்திரன் அவர்கள் எமது பாடசாலையின் இசை

மூலம் புகழ் பெற்ற ஒரு பழைய மாணவி ஆவார். இவர் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.சாதாரணம் வரை அருணோதயாக்கல்லூரியில் கல்வி கற்றார். சிறுவயது முதல் தமிழ் சமயம் சங்கீதம், நடனம் போன்றவற்றில் ஆர்வத்ததுடன் கற்றார் தந்தையின் வழிகாட்டிலில் சிறுபாட்டுக்கள் பாடி பாடசாலையில் நடைபெறும் போட்டிகளில் பரிசில்கள் பெற்றவர்இவரது தாயாரும் தந்தையாரும் இசைவழிமூலம் வந்தவர்கள் ஆதலால் திருமகன் அவர்களும் இசைமூலம் தனது திறமையை வளர்ந்து சங்கீதபாடத்தில் உதவிகல்விப்பணியாளர் வரை தன்னை வளர்த்துக்கொண்டவர். திரு. V.K. நடராஜா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அளவை இசைக் கலைமன்றத்தில் இணைந்து முறைப்படி இசையைக் கற்றும் தேர்ச்சியும் பெற்றார். V.K. நடராஜா, திரு.பொன் முத்துகுமார், திருமதி ஞானம் பிகை செல்வி.மு.தனதேவி, திரு, அ.திலகேஸ்வரன் ஆகியோருடனும் இசையை முறையாக கற்றவர். இசைகலா மன்றத்தின் மூலம் சங்கீத தரம் 6 (ஆசிரியர்தரம்) சித்தி பெற்று சங்கீத கலா வித்தகர் என்ற பட்டத்தை 1975இல் பெற்றார்.

1973இல் சுண்ணகம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட நுண்கலைபீடத்தில் கற்று இசைகலை மாணிபட்டத்தையும் பெற்றார். 1976இல் பதுளையில் அறநெறிப்பாடசாலைக்கு பண்ணிசை கற்பிப்பதற்கு அழைத்தன் காரணமாக இசை ஆசிரியராக கடமையாற்றினார். பதுளை பிரதேசத்தில் இசை ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் பதுளை தமிழ் மகளிர் கல்லூரியில் அதிபர், ஆசியர்களின் வேண்டு கோளுக்கு இணங்க 1977 இல் தற்காலிக ஆசிரியராக கடமையாற்றினார். அவ்வாண்டில் நிரந்திர ஆசிரியர் நியமனம் பெற்று அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க தொடர்ந்து அதேபாடசாலையில் கடமையாற்றினார். அதனை தொடர்ந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சங்கீத பாட ஆசிரியார் பயிற்சியை நிறைவு செய்த பின் 1981இல் முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலத்திலும் 1986இல் மல்லாகம் மகா வித்தியாத்திலும் 1991இல் அருணோதயாக்கல்லூரியிலும் தனது ஆசிரியப்பணியை மேற்கொண்டார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகாரணமாவும் கணவன் பொறியிலாராக மகியங்கனையில் கடமையாற்றியதன் காரணமாக மத்திய மாகாணப்பாடசாலை ஆன மாத்தளை பாக்கியம் வித்தியாலத்தில் 1996 முதல்கடமையாற்றி 1998.10.01 முதல் ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்று 2003.08.23 முதல் மாத்தளைகல்வி வலயத்தில் உதவிகல்விப்பணிப்பாளாராக கடமையாற்றி 2015-05-20இல் ஓய்வு பெற்றார்.

திருமதி திருமகன். இராமச்சந்திரன் அவர்கள் 1976முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் வாய்பாட்டிலும் திருமுறையிலும் தேர்ச்சி பெற்று தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை நடாத்தி வந்துள்ளார். மாத்தளை கல்விவலயத்தில் அழகியல்பாட பொறுப்பாசியாராகவும் கடமையாற்றியதன்பயனாக இசை, நடனம், நாடகம் சித்திரம் ஆகிய பாடகளில் மாத்தளை மாவட்டம் வளர்ச்சியடைந்ததையிட்டு மாத்தளை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவரது மூன்று பிள்ளைகளும் ஓரளவு இசையைக்கற்றுள்ளனர். இருமகன்மாரும் வீணையையும் கற்றுள்ளனர்.தொடர்ந்து இசைத்துறைக்கும் பணியாற்ற வேண்டும் என்பதை தனது அவா என குறிப்பிட்டுள்ளார். அவரதுகனவு நிறைவு பெறகொழும்பு பழைய மாணவர் சங்கம் வாழ்த்துகின்றது.

இவரதுதந்தையார்பொன்னம்பலம் ஒரு இசை ஆசிரியார். வட்டுகோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் (Jaffna Collage) நீண்டகாலம் பணியாற்றியவர். அவருடைய இரண்டாவது புதல்வி கலைமகள், அவரும் ஒரு ஆசிரியர். பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்து கௌரவித்த மைக்காக நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இங்கு வருகை தந்திருக்கும் கலா பூசனம் திரு, வி. செல்வரத்தினம் அவர்களும் மூத்த பழைய மாணவர் வரிசையில் உள்ள ஒருவர் ஆவர். அளவெட்டி தெற்கு விசுவலிங்கம் அன்னபூரணி தம்பதிகளின் மகனாக பர்மா நாட்டில் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை அளவெட்டி அருணாசலம் வித்தியாலத்திலும், இடைநிலை கல்வியை அருணோதயாக் கல்லூரியிலும் உயர்கல்வியை சுண்ணாகம் ஸ்கந்தவரோதையும் கல்லூயிலும் கற்று உயர்தகமை கற்கை நெறியை கட்டுப் பெத்த தொழில் நுட்பக் கல்லாரியிலும் கற்றார். நீண்ட காலமாக தனியார் கல்வி நிலையங்களில் கணித விஞ்ஞான ஆசிரியாராக கடமையாற்றினார். மாணவர்களின் நன்மை கருதி கல்விப்பொது சாதரண மாணவர்களுக்கு 24 கணிதம், விஞ்ஞானம் போன்ற நூல்களையும் தரம் 6 முதல் தரம் 9 வரையான இடைநிலை வகுப்பு மாணவர்களுக்காக கணிதம், விஞ்ஞானம் சமூகக்கல்வி போன்ற பாடங்களில் 10 நூல்களும் எழுதி வெளியிட்டவர். குறிகிய கால இடைவெளியில் தனது தாயாருடன் தென்னிந்தியாவுக்கு தலயாத்திரை சென்றவர் அதன்பின்னர் கொழும்பில் தனியார் கல்வி நிறுவனத்தில் பொறுப்பு அதிகாரியாக பணிபுரிந்தார். அதன் பின்னர் மனைவி, தந்தை ஆகியோருடன் இந்தியாவிற்கு தல யாத்திரைக்காக சென்றார். அங்கு 3 மாதங்கள் தங்கியிருந்து, காசி உட்பட பல திருத்தலங்களையும் தரிசித்தார். ஸ்ரீ காஞ்சி காம கோடி பூடாதிபதி ஜகத்குரு சந்திர சேகரேந்திர கரகவதி சங்கராச்சாரிய சுவாமிகளை வணங்கி ஆசிர்வாதம் பெற்றார். அதன் பயனாக 19 ஆன்மீக அறிவு நூல்களையும் வெளியிட்டு பலரது பாரட்டுகளையும் பெற்றவர். தினக்குரல் பத்திரிகையின் வார வெளியட்டில் தொடர்ந்து 70 வாரங்கள் தென்னிந்திய தலாங்கள் பற்றி எழுதியுள்ளார். உதயன் பத்திரிகையில் பலகட்டுரைகள் எழுதியுள்ளார். சந்நிதியான் ஆச்சிரம் வெளியீடான ஞானக்கதிர் மலரிலும் பலகட்டுரைகள் எழுதியுள்ளார்.

அராலி முத்துமாரியம்மன் ஆலயத்தின் செயலாளராக 20 வருடங்கள் பணிசெய்து ஆலய வரலாற்றை புத்தகமாக வெளியிட்டார். அராலி மத்தி உலோக சிட்டி விநாயகர் சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை தொடர்ந்து தலைவராக பதவி வகிக்கின்றார். சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக 30 வருடங்கள் தலைவராக இருந்துள்ளார். யாழ் மாவட்ட சிக்கன கடன் உதவிச் சங்கத்தில் 10 வருடங்கள் பணிப்பாளார் சபையில் செயற்பட்டுள்ளார். ச்ங்கானை மத்திய சபையின் பிரதம மத்தியஸ்தராக 7 ஆண்டுகள் பணிசெய்தார். வடமாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுதுறை அமைச்சினால் நடத்தப்பட்ட சிறந்த நூல் பரிசுத் தெரிவில் சிவபெருமானை திருக்கயிலாயத்தில் கண்டேன் என்னும் நூல்தெரிவு செய்யபட்டு விருது வழங்கப்பட்டது.

அருட்கவி விநாசித்தம்பி ஆசிரியரின் ஆசிகளுடன் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்ட இவர் 1996 ஆண்டு முதல் அகில இலங்கை சமாதான நீதவான் பதவி கிடைக்கப்பெற்று அதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவை செய்துள்ளார். இவருடைய அனைத்து செயற்பாடுகளுக்கும் கொழும்பு பழைய மாணவர் சங்கம் பராட்டும் வாழ்த்தும் தெரிவித்து கொள்வதோடு இங்கு வந்து கௌரவித்தமைக்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றது.

எமது பாடசாலை 1894ம் ஆண்டு ஆரம்பிக்கபட்டு 124 ஆண்டுகள் கடந்து சென்றுள்ளது. 2019ம் ஆண்டு தனது 125 ஆண்டை சிறப்பாக கொண்டாட உத்தேசித்துள்ளது. தற்போது IAB பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலை நவீன காலத்திற்கு ஏற்ப பல கட்டிட வசதிகளைக் கொண்டும் கற்பித்தலில் திறமை கொண்ட பல ஆசிரியர்களையும் செயற்படுகின்றது என்பது பலராலும் எற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும் இதற்கு காரணமாக அமைந்த பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும், மாணவர்களின் பெற்றோரையும் பழைய மாணவர் தாய்ச்ஙகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், வெளிநாட்டில் உள்ள அனைத்து பழைய மாணவர் சங்களையும் கொழும்பு பழைய மாணவர்சங்கம் பாராட்டி வாழ்த்துகின்றது. எமது கொழும்பு பழைய மாணவர் சங்கம் எட்டு ஆண்டுகளை பூரணமாக நிறைவு செய்து 9 வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இந்த எட்டு ஆண்டுகளிலும் ஒழுங்கான முறையில் பொதுச்சபை கூட்டங்களையும், நிர்வாகசபை கூட்டங்களையும் நடாத்தி தனது நம்பகத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. தொடர்ந்தும் அப்பணியை செய்யும் இதுவரை 110 பேர் நிரந்தர அங்கத்தவர்களாக இணைந்துள்ளார்.

அவர்களில் மூவர் அமரத்துவம் அடைந்துள்ளனர். தபால் அதிபர் அண்மையில் அமரத்துவம் அடைந்த கணவதிப்பிள்ளை பழைய மாணவர் சங்கம் அமைத்த பொழுது அதில் நிர்வாக சபை உறுப்பினர் ஆக இணைந்து செயற்பட்டவர் 3 ஆண்டுகள் பணியாற்றியவர். தனது உடல்நிறை இயலாமை கருத்திற் கொண்டு விலகிநின்று செயற்பட்டார். நல்ல விழுந்தோம்பல் மிக பண்பாளளை எங்கள் சங்கம் இழந்தது கவலைக்கு உரிய விடயம். அவரது ஆத்மா இறைவனை பிராத்திப்போமாக.

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் எட்டாவது பொதுச்சகைக்கூட்டம் 2017-09-10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கொழும்பு மாவட்டம் வெள்ளவத்தையில் அமைந்துள்ள தமிழ்சங்கத்தின் பிரதான மண்டபமான சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்று. திரு. ந. சிவபாதன் கூட்டத்திற்கு தலைமை வசித்தார். 41 உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். பிரதம அதிதயாக எமது பாடசாலையின் பழைய மாணவனும் வலிகாமம் கல்வி வலய பிரதக்கல்விப் பணிப்பாளருமாகிய திரு, ஆ. இளங்கோ கலந்து சிறப்பித்தார். அவர் தற்போது தீவகம் கல்விவலயத்தின் கல்விப் பணிப்பாளராக தரம் உயர்கப்பட்டுள்ளார். என்பது மிகவும் சந்தோவுமான விடயமாகும். சிறப்பிவிருந்தினர்களாக ஓய்வுநிலை உப அதிபரும் இசை ஆசிரியுமான திரு. கே. எஸ் சிவஞானராஜாவும் அவர்களும் கௌரவ விருந்தினராக கொழும்புகிளை அங்கத்தவர் திருமதி. அருந்ததி ரவிக்குமார். அவர்களும் கலந்து சிறப்பித்தனர் ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர் திரு.செ. கந்தசாமி கௌரவ விருந்தினாராக அழைக்கப்பட்டார். இருந்தும்

சுகயீனம் காரணமாக வரமுடியவில்லை என அறிவித்தார். வாழ்த்துரை வழங்குவதற்காக பாடசாலை அதிபர் திரு. நா. கேதீஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். எமது நிர்வாகசபை உறுப்பினர் திரு, ஜெ. கலைச்செல்வன் நிகழ்வை பொறுப் பேற்று நடாத்தினார். நிகழ்விற்கு வருகைதந்து அனைவரையும் தமிழ்சங்கத்தின் பிரதான வாயில் இருந்து பிரதான மண்டத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். தமிழர் பண்பாட்டுக்கு அமைய முதலாவது நிகழ்வாக மங்களவிளக்கு ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது. பிரதம அதிதி அவர்கள் மங்கள விளக்கு ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து தலைவர், பாடசாலை அதிபர், சிறப்பு விருந்தினர். கௌரவிருந்தினர் திரு. சு. ஜெயசந்திரன் திரு. கா.கிருபாகரன், திரு.நா.மகேந்திரன் திருமதி, வி.நாகேஸ்வரன் திரு.ம. ஜோகப் இதயராஜ், திரு அ.தவக்குமார் திரு. சிவசக்திநாதன் , திரு.இ.சஞ்சயன் திருமதி. உ.காந்த ரூபன், திரு. ந.விக்கின ராஜா, ஆகியோர் மங்கள விளக்கோற்றி சிறப்பித்தனர் தொடர்ந்து பாடசாலை நிறுவுனர் அருணாசல உடையார் அவர்களின் திரு. உருவப்பட்டத்திற்கு குடும்ப உறுப்பினர் திருமதி சிவானிபுலிகரன் விளக்குஎற்றி மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தினார். விருந்தினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டன பிரதம அதிதி, தலைவர், அதிபர் சிறப்பு விருந்தினர், கௌரவவிருந்தினர், திருமதி. லி.நாகேஸ்வரன், திரு.செ.சற்குணம் ஆகியோர் மேடையில்அமர்ந்து சிறப்பித்தனர். திருமதி. வி.நாகேஸ்வரன் அவர்களால் தேவாரம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து அமரத்துவம் அடைந்த முன்னார் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் கல்வி ஊழியார்கள் 2017ம் ஆண்டு ஆசிரியர்சேவையில் இருந்து அமரத்துவம் அடைந்த அமரர் செல்வராணி ஆசிரியர் ஆகியோருக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அடுத்த நிகழ்வான வரவேற்புரையை கொழும்புகிளை அங்கத்தவரும், வலி தென்மேற்கு பிரதேசபை வருமானவரி பரிசோதகருமான திருமதி. ஜோசப் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து தலைமை உரையை தலைவர் திரு. ந. சிவபாகன் அவர்கள் ஆற்றினார். தனது உரையில் பிரதம அதிதி, சிறப்பு அதிதி கௌரவ அதிதி அனைவரையும் வரவேற்று நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு இந்த மேடையில் வீற்றிருக்கும் அனைவரும் நான் ஆசிரியராக கற்பித்த காலத்தில் மாணவர்களாக இருந்தவர்கள் இதனால் தனக்கு பெருமையாக உள்ளது பாடசாலை அதிபர் எல்லாவற்றையும் சிறப்பாக செய்ப்படுத்தி செல்கின்றார். மற்றபாடசாலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு முண்ணனியில் திகழ்கின்றது. தனக்கு தெரிந்தவரை 17 அதிபர்கள் கடமையாற்றியுள்ளார். நூற்றுகணக்கான ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர். ஆயிரக்கணக்காண மாணவர்கள் கற்றுள்ளனர். பட இருந்த கொட்டில் பாடசாலை இன்று பல பௌதிக வளங்களைக் கொண்ட பாடசாலையாக மாற்றம் பெற்றுள்ளது. இன்றைய காலத்தில் உள்ள வசதிகள் அன்றை காலத்தில் இருக்கவில்லை. மிகக்குறைந்த நிதி மூலம் வளர்ந்துதெடுக்கப்பட்டது. முழுமை பெற்ற பாடசாலையாக நிகழ்வது எமக்கு எல்லாம் பெருமையாக உள்ளது.பிரதம அதிதி இளங்கோ அவர்களை சிறுபிள்ளை முதல் நன்கு தெரியம் SLAS பரீட்சைக்கு மிகக்குறைந்த புள்ளிகளால் நியமனத்தை தவறவிட்டவர். அரச அதிபராக இருக்க

வேண்டியவர் பிரதிக்கல்விப்பணிகள் ஆக இருபது சந்தோஷமான விடயம் அவர் சிறப்புடன் வாழ இறைவன் அருள் புரிவாராக.

சிறப்பு அதிதி சிவஞானராஜா அவர்கள் சிறந்த பாடகர் புதிய மெட்டுக்களை எடுத்து சிறப்பாக பாடக்கூடிய ஒருவர் அவருக்கு என்று ஒரு ரசிகன் கூட்டம் என்றும் இருக்கும் அவரும் அவரது பிள்ளைகளும் சிறப்புடனும் வாழ இறைவன் அருள்புரிவாராக. சிறப்பு கௌவவிருந்தினர் வருகை தராவிட்டாலும் அவருக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கின்றேன். கௌரவ விருந்தினர் திருமதி அருந்தி ரவிக்குமார். அவர்கள் எமது பழைய மாணவர் சங்கத்திற்கு தன்னாலான நிதி உதவியை செய்துள்ளார். அவரின் தகப்பனார். இராமநாதன் அவர்களும் பாடசாலைக்கு உதவிபுரிந்துள்ளார். அவர்களுக்கும் இறைவன் அருள்புரிவாராக. நிர்வாக சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஏதொ ஒரு வகையில் உதவி புரிந்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக விருந்தினர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதி அவர்களை தலைவர் திரு. ந. சிவபாதன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். திரு. சி. செல்வநாதன் அவர்கள் மாலை அணிவித்து கௌரவித்தார். பாடசாலை அதிபர் அவர்களை திரு. அ.சிவயோகநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தீரு. ந. நந்தகுமார் அவர்கள் மாலை அணிவித்து கௌவித்தார். சிறப்பு அதிதிக்கு திரு. ந.விக்கினராஜா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌவிக்க திரு. தா. சிவஞானசுந்தரம் மாலை அணிவித்து கௌவித்தார். கௌரவிருந்தினர் அருந்தி ரவிக்குமார் அவர்களுக்கு திருமதி. ச. தில்லைநாதன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்க திருமதி. சிவானி புலிகரன் மாலை அணிவித்து கௌரவித்தார்.

கௌரவத்தை பெற்றுக் கொண்ட பிரதம அதிதி தனது நிறுவுனர் பேருரையில்அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்க கிளையின் எட்டாது ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும் எனது அன்பான வணக்கம் பெருமளவிலான அருணோதயன்கள் இங்கு கூடியிருப்பது மனமகிழ்ச்சியை தருகின்றது. நான் படித்த பாடசாலையை நினைவு கூர்வதற்கு வழங்கி சந்தர்ப்பத்தை இட்டு மன மகிழ்ச்சி அடைக்கின்றேன். நான் பாடசாலையீல் கற்பதற்கு முன் உள்ள காலம் கற்ற காலம், கற்றபின் உள்ள காலம் என்றவாறு எனது உரையை நிகழ்த்தலாம் என நினைக்கின்றேன். சைவ தமிழ் கலாசாரத்திற்கும் கல்விக்கும் புத்துயிர் அளிக்கும் நோக்குடன் அளவெட்டியில் வாழ்ந்த நாகமுத்து அருணாசல உடையார் அவர்களால் 1894ம் ஆண்டு ஓலைக் கொட்டிலில் ஆரம்பித்த ஒரு அறிவு ஆலயமே இன்றைய அருணோதயாக் கல்லூரி ஆகும். ஆரம்பித்தில் ஆண்கள் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு பின் கலவன் பாடசாலை மாற்றப்பட்டு 1951இல் அருணோ தயாக்கல்லூரி என்ற நாமம் சூட்டபட்டது. ஆங்கில மொழியின் தேவை கருதி ஆங்கில மொழி பாடசாலையாக இயங்கியது. 1961 இப் பாடசாலையை அரசாங்கம் பொறுப் பேற்றது 1969 இல் 511 ஆண்கள் 400 பெண்கள் ஆக மொத்தம் 914 மாணவர்கள் கல்வி கற்றனர். தனக்கு கற்பித்த ஆசிரியர்கள் பற்றியும் அவர்களுடைய செயற்பாடுகள் பற்றியும் விவரமாக கூறினார். தான் கற்ற காலத்தில் உதைபந்தாட்டத்திலும் கொக்கி போட்டியிலும் பாடசாலை முண்ணனியில் திகழ்ததாகவும் கூறினார். எனது பாடசாலையில் தொழில்நுட்ப பீடம் ஒன்று அமைவது சிறப்பானது

என்றும் அதற்காக கொழும்பு பழைய மாணவர் சங்கத்தில் கடைமை புரிகின்ற பொறியிலாளர்கள் திரு. ந. யோகராஜா, திரு. ஜெ.கலைச்செல்வன் சிந்திக்க வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்தார் தன்னை அழைத்தமைக்கா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**குறிப்பு**

உலகின் புகழ் பூத்த பொறியிலாளர். திரு, மகாலிங்கம் விளங்கினார். அவரும் ஒரு அருணோதயாக்கல்லூரியின் பழைய மாணவன் அவரால் உருவாக்கப்பட்ட எந்திரவியல் இயந்திரம் பேராதனை பல்கலைகழத்தில் பொறியியல் பீடத்தில் காட்சிப் பொருளாக உள்ளது. வாழ்நாள் பேராசியராக கௌரவிக்கப்பட்டு 80 வயது வரை தனது கடமைகளை செய்தவர். இலங்கையின் முக்கிய ஆங்கில நாளேடான The Island பத்திரிகையில் அவரைப்பற்றி முழுபக்கத்தில் சிங்கள பேராசிரியர் விபரித்திருப்பது எம்மை எல்லாம் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. அவ்வளவு தூரம் மிகச்சிறந்த மூளைசாளி அவர்.

# அடுத்து உரையாற்றிய சிறப்புவிருந்தினர்

கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் பாடல்பாடி கும்பழாவளை பதிகம்பாடி, தனது உரையை தொடர்ந்தார். 1962 முதல் வரை அருணோதயக்கல்லூரியில் கற்றதாக தெரிவித்தார். தனக்கு கற்பித்த ஆசிரியர்களை நினைவு கூர்ந்தார். தான் 8ம் வகுப்பு கற்கும்போது காக்கை வன்னியனிலே என்ற நாடகத்தை (1965இல்) மேடை ஏற்றியதாக தெரிவித்தார். 1972 இல் அரசநியமனம் கிடைத்தது. 1974/1975இப் பலாலி ஆசிரியர் கலாசாலையில். தனது சேவைக்காலம் 41 வருடங்கள் 27 பாடசாலைகளில் 57 அதிபர்களின் பணிபுரிந்தார். வேலையில் சேர்ந்தபோது ஆரம்பச்சம்பளம் 220 ரூபா தனக்கு 3 பெண் குழந்தைகள். மூவரும் பட்டதாரிகள். மூவரும் திருமணம் முடித்துள்ளனர். கொழும்பில் ஒரு பழைய மாணவர் சங்கம் அமைத்தது. ஒரு நல்ல விடயம். பாடசாலையின் வரலாறு பதியப்பட வேண்டும். நான் இங்கு வந்தபோது ரீ ஒன்று வேண்டி வரும்படி ஒருவரிடன் கேட்டேன். சிறு பிள்ளை போல் ஓடிப்போய் வேண்டின் கொண்டு வந்து தந்தார். அவர் நடராஜா மாஸ்ரரின் மகன் ஒன்றும், ஒருபொறியிலாளர் என்றும் பெயர் யோகராஜா என்றும் அறிந்து வியப்படைந்தேன். என்னை இங்கு அழைத்தமைக்கு பழைய மாணவர் சங்கத்திற்கு நன்றிகள் உரித்தாகுக எனக் கூறிபாடல்பாடி தனது உரையை நிறைவு செய்தார்.

அடுத்துபேசிய கௌரவவிருந்தினர் திருமதி அருந்ததி ரவிக்குமார்அவர்கள், நான்ஆரம்ப வகுப்பு முதல் க.பொ.த (சாதாரணம்) வரை அருணோதயாக் கல்லூரியில் கற்றேன் உயர்தரகல்வியை ஸ்கந்தரோதயாக் கல்லூரியில் கற்றேன். தன்னை அழைத்து கௌரவித்தமைக்கு நன்றி தெரிவித்துதனதுஉரையை சுருக்கமாக நிறைவு செய்தார். தொடர்ந்து திரு.க.நிதியானநாம் அவர்களால் செயலாளர் அறிக்கை வாசிக்கப்பட்டது அறிக்கை சரியென திரு, த.நந்தகுமார் முன்மொழிய திருமதி செ. ஜெயசீலன் வழிமொழிந்தார்.

தொடர்து திரு. அ.சிவயோகநாதன் அவர்களால் பொருளாளர்அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது அறிக்கை அச்சுப்பிரதி சகலருக்கும் வழங்கப்பட்டது. ஞாபகார்த்த நன்கொடை (memorind fund) ரூ.325000ஐ தனியான ஒரு கணக்காகபேணி வைக்க சபையின் அனுமதி கூறினார். திருமதி ம. சிவபாதசங்கம் முன்மொழிய திருமதி.ச.தில்லைநாதன் அவர்கள் வழிமொழிந்தா. பொருளாளர் அறிக்கை சரி என திரு. ச.செல்வநாதன் முன் மொழிய திரு. வி.சிவசக்திநாதன் வழிமொழிந்தார். அடுத்த முக்கிய நிகழ்வாக 2017/2018 இற்காக 8வது நிர்வாகசபை தெரிவு செய்யும் நிகழ்வு நடைபெற்றது.தற்காலிக தலைவராக திரு.ந.லிக்கினாராஜாவை திரு.அ.சிவயோகநாதன் முன்மொழிய திரு.ந.யோகராஜா வழிமொழிந்தார். அவரது தலைமையில் முழமையான நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

அடுத்து புதிய நிர்வாக சபைக்கான வாழ்த்துரைஅதிபர் திரு.நா.கேதீஸ்வரன் அவர்கள் வழங்கினார். நான். எல்லா நாட்களும் பாடசாலைக்கு சென்று வருகின்றேன். இங்கு சமூகமளித்திருக்கும் திரு. அ. தவக்குமார் முதலில்வர்த்தக பிரிவில் கற்கவிரும்பினார். ஆனால் அவரதுதிறமையை அளவீடு செய்துகணிதத்துறையை கற்குமாறு ஆலோசனை வழங்கியதன் பேரில் அவர் இன்று பொறியியல்பீடம் சென்று கற்றுவருகின்றார். இவருடன் கற்ற மற்றொருமாணவன் விஜிதரன் மருவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். எமது பாடசாலையுடன் எந்தவித தொடர்பும் இல்லாத மல்லாகம் வித்தியாலய முன்னாள் அதிபர் திரு.சச்சிதானந்தன் ரூ.20000ஐ அன்பளிப்பாக

எமதுபாடசாலைக்கு தந்துள்ளார். எமது பாடசாலை ஆசிரியர்கள் மிக அர்ணிப்புடன் கடமை ஆற்றுகின்றனர் 25பரப்பு காணி வாங்கியதன் மூலம் தேவையான கட்டிடங்களை கூடியதாக இருந்தது 3000ரூபா அமரர்க்கூடிய அரங்கு ஒன்று தந்போது தேவையாக உள்ளது.குறிபார்த்து சுடவதில் எமது பாடசாலை மாணவான் சாதனை படைத்தார். வல்லிவெட்டி சிதம்பராக்கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்கம் 10000 மாணவர்களுக்கு கணித புதிர் பரீட்சை நடத்தியது. இலங்கையில் 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 2 மாணவர் எமது பாடசாலை மாணவர்கள் க.பொ.த. ( சாதாரணப்) பரீட்சையில் குறைவான மாணவர்கள் சித்தியடையாத மாணவர்கள் உள்ளமையால் தொழில்பீடம் கிடைக்கவில்லை. விக்டோரியா கல்லூரியில் கூடுதலான மாணவர்கள் சித்தியின்மை காரணமாக அப்பாடசாலைக்கு தொழில்பீடம் கிடைத்து பாடசாலையில் மாலை, இரவு வரை பாடசாலையில் வகுப்புகள் நடக்கின்றன. பாடசாலைக்கு நிறுவுனர் சிலையை சித்திர ஆசியரே வடிவமைத்து தந்தார். நாங்கள் அனைவரும் பாடசாலைக்கு வரவேண்டும் என்னை அழைத்தமைக்கு உங்கள் அனைவருக்கும் நன்றிகள். புதிதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை பாடசாலைக்கு உதவி புரிய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். செயலாளாரின் நன்றியுரையை தொடர்ந்து கல்லாரி கீதத்துடன் மாலை 2 மணியளவில் கூட்டம் இனிது நிறைவு பெற்றது. கூட்டம் நிறைவு செய்யப்ட்டபின் அனைவரும் மதிய போசனத்தில் கலந்து கொண்டனர்.

| பதவி | உறுப்பினர்கள் பெயர் | முன் மொழிந்தவர் | வழி மொழிந்தவர் |
|---|---|---|---|
| தற்கால தலைவர் | திரு.ந. விக்கினராஜா | திரு.அ.சிவயோகநாதன் | திரு.ந.யோகராஜா |
| செயலாளர் | திரு.க. நித்தியானந்தம் | திரு.அ.சிவயோகநாதன் | திரு.இ.முனீஸ்வரன் |
| தலைவர் | திரு.ந.சிவபாதன் | திரு.க.யோகராஜா | திரு.சி.செல்வநாதன் |
| பொருளாளர் | திரு.அ.சிவயோகநாதன் | திரு.ஜெ.கலைச்செல்வன் | திரு.த.நந்தகுமார் |
| உபதலைவர் | திரு,செ.சண்முகம் | திரு.கா.கிருபாகரன் | திருமதி.செ.ஜெயசிலன் |
| | திரு.ச.கதிர்காமதம்பி | திரு.க.நித்தியனந்தன் | திரு.ந.விக்கினராஜா |
| | திரு,ந.விக்கினராஜா | திரு.ந.யோகராஜா | திரு.க.நித்தியானந்தம் |
| உபசெயலாளர் | திரு.ஜெ.கலைச்செல்வன் | திரு.தெ.தருமரட்ணம் | திருமதி.உ.காந்தரூபன் |
| உபபொருளாளர் | திரு.ந.யோகராஜா | திரு.ந.விக்கினராஜா | திரு.அ.சிவயோகநாதன் |
| நிர்வாக சபை | திரு.கா.கிருபாகரன் | திருமதி.செ.ஜெயசீலன் | திரு.தா.சிவஞானசுந்தரம் |
| உறுப்பினர்கள் | திருமதி.செ.ஜெயசீலன் | திருமதி.சிவானிபுத்திரன் | திருமதி.ச.தில்லைநாதன் |
| | திருமதி.உ.காந்தரூபன் | திருமதி.சி.தில்லைநாதன் | திருமதி.ஸ்ரீ.மாணிக்கம் |
| | திருமதி.ச.தில்லைநாதன் | திருமதி.உ.காந்தரூபன் | திருமதி.சிவபாதசுந்தரம் |
| | திருமதி.சிவானிபுலிகரன் | திரு.ந.சிவபாதன் | திருமதி.அ.ரவிக்குமார் |
| | திரு.க.நந்தகுமார் | திரு,ஜெ.கலைசெல்வன் | திரு.க.நித்தியானந்தம் |
| | திரு.வி.சிவசக்திநாதன் | திருமதி.ச.இரட்ணமயில் | திரு.இ.சஞ்சயன் |
| | திரு.சி.செல்வநாதன் | திரு.செ.சற்குணம் | திரு.ந.விக்கினராஜா |
| | திரு,ஜெ.தருமரட்ணம் | திருமதி.ப.வரதராஜன் | திரு.சா.கிருபாகரன் |
| | திரு.தா.சிவஞானசுந்திரம் | திருமதி.அ.இரவிகுமார் | திரு.ஜெ.தருமரட்னம் |
| | திரு.இ.முனீஸ்வரன் | திரு.ரு.விக்கினராஜா | திருமதி.அ.ரவிக்குமார் |
| | திரு.க.நித்தியானந்தன் | திரு.ந.யோகராஜா | திரு.இ.முனீஸ்வரன் |
| | திரு.இ.சஞ்சயன் | திரு,வி.சிவசக்திநாதன் | திரு.சி.செல்வநாதன் |
| | திரு.தி.நகுலன் | திரு.ந.யோகராஜா | திரு.க.நித்தியானந்தம் |
| | | | |

# 8வது நிர்வாக சபை காலப்பகுதியில் அமர்த்துவம் அடைந்த பழைய மாணவர் அஞ்சலி விபரம்

1. ஜெகசோதி கணபதிபிள்ளை
3வது நிர்வாகசபை கூட்டம் 2018-01-07

2. சந்திரா சண்முகநாதன்
3வது நிர்வாக சபைகூட்டம் 2018-01-07

3. ராஜலச்சுமி நாகலிங்கம்
5வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-03-11

4. சரஸ்வதி பொன்னம்பலாம்
5வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-03-11

5. இராசேந்திரம் புவன்ராஜ்
5வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-03-11

6. பொன்னுத்துரை
5வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-03-11

7. னுச. நந்தினி பாலச்சந்திரன் (லண்டன்)
6வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-04-01

8 விஸ்வநாதன் சிவஞான சேகர்
8வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-06-03

9 ஜயாதுரை சிவஞானம் (கனடா)
8வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-06-03

10 திமதி இராமநாதன் (நியுஸ்பொந்து)
8வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-06-03

11 தியாகராஜா மணேஸ்வரி
8வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-06-03

12 பொன்னம்பலம் பணபதிப்பிள்ளை
9வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-07-01

13 அருள்பலம் மங்களேஸ்வரி
9வது நிர்வாக சபைக்கூட்டம் 2018-07-01

## 2010.06.20 முதல் 2016.08.31 வரையுள்ள

## அங்கத்தவர் பட்டியல்

| | Name | Address |
|---|---|---|
| 01. | Mr. K. Nithyanatham | Q/2/5, Soysapura Flats, Moratuwa. |
| 02. | Mr. N. Sivapathan | 14, 2/2, Daya Road, Colombo - 06. |
| 03. | Mr. S. Jeyachandran | 56, 1/1, Hamers Avenue, Colombo - 06. |
| 04. | Mrs. Arunthathy Ravikumar | 40A, 32nd Lane, Colombo - 06. |
| 05. | Mr. P. Gobikrishan | 108, 5/1, Maning Place, Colombo - 06. |
| 06. | Mr. S. Selvanesan | College View, Alaveddy West, Alaveddy. |
| 07. | Mr. R. Sivadasan | B3, 1/2, Soysapura Flats, Moratuwa. |
| 08. | Mrs. Sivani Puvigaran | 46A, Pamankada Lane, Colombo - 06. |
| 09. | Mr. S. Satkunam | 15, 1/8, Francies Road, Colombo - 06. |
| 10. | Mr. T.N. Paramanadan | 35A, Maheswary Lane, Colombo - 06. |
| 11. | Mrs. T. Paramanadan | 35A, Maheswary Lane, Colombo - 06. |
| 12. | Mr. K. Kirubagaran | 3, 2/1, Madangahawatha Lane, Colombo - 06. |
| 13. | Mrs. Joisy Christy | B12, G4, Soysapura Flats, Moratuwa. |
| 14. | Mrs. Bavani Varatharajah | 33, 4/4, Kinross Avenur, Colombo - 04. |
| 15. | Mr. Thillaiambalam Shanmuganathan | 46, 3/4, Seagall Cour Hambden Lane, Colombo - 06. |
| 16. | Mrs. Mathuram Kulendra | London |
| 17. | Mrs. Uthayakumary Kaantharuban | 14, 4/4, 37th Lane, Colombo - 06. |
| 18. | Mr. N. Mylvaganam | 44, Pamankada Lane, Colombo - 06. |
| 19. | Mrs. Thiruchelvi Mylvaganam | 44, Pamankada Lane, Colombo - 06. |
| 20. | Miss. N. Janatha | 15, 1/1, Initurm Road, Dehiwala. |
| 21. | Late M. Kugathasan | - |
| 22. | Mr. N. Mahendran | A - 2/2, Housing Flats, Colombo - 04. |
| 23. | Mrs. S. Mangaleswary | 33, 2/3, Kinross Avenue, Colombo - 04. |
| 24. | Mr. S. Loganathan | Chedisolai, Alaveddy West, Alaveddy. |
| 25. | Mr. K. Kuneswaran | Neerveli North, Neerveli. |
| 26. | Mr. V. Nagarajah | 27, Maheswary Lane, Colombo - 04. |
| 27. | Mr. N. Wignarajah | 07, Kelankaduwa Place, off 1st Chapal Lane, Colombo-6. |
| 28. | Mr. R. Kasinathan | 115/2, W.A. Silvamawatha, Colombo- 06. |
| 29. | Mr. N. Gajabaran | London |
| 30. | Mr. T. Sithamparakumaran | Australia. |
| 31. | Mrs. Sumathy Vinchndrarajan | 26/1, Alfired Place, Colombo - 03. |
| 32. | Mr. Y. Sivashankara | 37, 32nd Lane, Colombo - 06. (London) |
| 33. | Mrs. Jayanthy Suriyakumar | 46, 4/1, Hampden lane, Colombo - 06. |

| | | |
|---|---|---|
| 34. | Mr. Thiruvathavooran | 65A, 1B C Road, Colombo - 06. |
| 35. | Mrs. S. Jeyaseelan | 19, 3/2, 42nd Lane, Colombo - 06. |
| 36. | Mr. K. Kanasamoorthy | 25/3. Sri Maha Bodhi Road. Dehiwela. |
| 37. | Mrs.Dharshani Nandakumar | S, 1/10 Anderson Flats Colombo - 05. |
| 38. | Mr. P. Sivapalan | 42, 4/3, Rudra Mawatha, Colombo - 06. |
| 39. | Late Mr. V.P.Kanapathibillai | 15, Attapatu Mw., Dehiwela. |
| 40. | Mrs. Ananthini Nadakumar | 15, Attapatu Mw., Dehiwela. |
| 41. | Mr. S. Kathikamathamby | 24, Sagara Road, Colombo -04. |
| 42. | Mr. T. Tharmaratnam | 14, 5/3, Aruthusa Lane, Colombo - 06. |
| 43. | Mr. S. Mahendran Sarma | 43, 1st Chapel Lane, Colombo - 06. |
| 44. | Mrs. Mathini Subramaniyam | 7, Kelankaduwa Place, Colombo - 06. (London) |
| 45. | Mrs. Rukumanithevi Thirunavukkarasu | 26/1. Alfired Place, Colombo - 03 (Australia) |
| 46. | Mrs. Kamaladevi Kathiresambillai | 26/1. Alfired Place, Colombo - 03. (Canada) |
| 47. | Mrs. Thilainathan Chanthirakanthy | 33 5/5 Fredrica Road, Colombo - 06. |
| 48. | Mrs. P. Pushbajini | 36/2, 37th Lane, Colombo - 06. |
| 49. | Miss. S. Sivagaran | 54/1;Vivekanda Road, Colombo - 06. |
| 50. | Miss. Sundralingam Thulasika | Kenikkarai, Alaveddy East, Alaveddy. |
| 51. | Mr. Nagulan | 16, 1/2, E.S. Fenando Mawatha, Colombo - 06. |
| 52. | Mrs. Vithyaruby Saimathavan | 12, 1/6, Castle Lane, Colombo - 04. (Australia) |
| 53. | Mrs. Kulendra Vimalagini | 20A, 2/2 Station Road, Colombo - 06. |
| 54. | Mr. K. Selvaraj | 1A, Attapathu Mawatha, Dehiwala |
| 55. | Mr. T. Balavadivel | 56, Hortan Place, Colombo - 07. |
| 56. | Mr. T. Prabagarn (Prabagar) | Australia |
| 57. | Mr.R. Sanjan | B 40, 2/2 Maligawatha Flats, Colombo - 10. |
| 58. | Mrs. Sanjan Thushyanthini | B40, 2/2 Maligawatha Flats, Colombo - 10. |
| 59. | Mr. R. Muneeswaran | 88/2, Stork Place, Colombo - 10. |
| 60. | Mr.R. Peranavah | 27, 32nd Lane, Colombo 06. |
| 61. | Mr. K. Nithyananthan | 25, 2/2, 1st Chapel Lane, Colombo 06. |
| 62. | Mr. S. Jeevagaran | 573, Bluemendhal Road, Colombo - 13. |
| 63. | Mr. N. Yogarajah | 53/1, St. Peter's Lane, Colombo - 04. |
| 64. | Mr. V. Sivasakthynathan | 15/1, Beach Street, Colombo - 11. |
| 65. | Mrs. Pushpakanthy Ravi | Colombo 06. |
| 66. | Mr. A. Sivayoganathan | 39, Shoe Road, Colombo - 13. |
| 67. | Mr. A. Paskaran | 40, 4/3, Rudra Mawatha, Colombo - 06. |
| 68. | Mr. N. Sribavan | 154/3, W.A. Silva Mawatha, Colombo - 06. |
| 69. | Mr. Gnanakumaran Ganadhipan | 52/1, Fussels Lane, Colombo - 06. |
| 70. | Mrs. Thirugnanasambanthan Visvakamalam | Germany |

| | |
|---|---|
| 71. Mrs. Sivagini Baheerathan | 72. 1/1, Sri Gunaratna Mw., Mt. Laviniya. |
| 72. Mrs. Manickavasakar Sridevi | 12. 1/6, Castle Lane. Colombo - 04. |
| 73. Mr. A. Bahiradan | Upper Lake Road, Nuwara Eliya. |
| 74. Mrs. Chandrakumar Balagowry | C/o. Mayuran, Hatton National Bank. Mulaitheevu. |
| 75. Chandrakumar Mayuran | Hatton National Bank, Mulaitheevu. |
| 76. Mr. N. Senthuran | 24C, 1/2, Perera Lane, Colombo - 06. |
| 77. Mr. N. Mugunthan | 53B, 1/1, Vivekananda Road. Colombo - 06. |
| 78. Mr. K. Kabilan | 14. 4/4, 37th Lane, Colombo - 06. |
| 79. Mr. T. Nandakumar | S/1/10, Anderson Flats. Naranhenpitiya, Colombo - 05. |
| 80. Mr. M. Joseph Etayaraj | Alukkai, Alaveddy. |
| 81. Mr. S. Srikantharaja | 06, Daya Road, Colombo - 06. |
| 82. Mrs. Karunagaran Purathani | 44. 6/2, Aruthusa Road. Colombo - 06. |
| 83. Mrs. Ananthasayan Sivamalar | Co-op Street, Alaveddy East. Alaveddy. |
| 84. Mrs. Srikanthayobasinga Vasuki | 42. Waidya Road, Dehiwela. |
| 85. Mrs. Kokulananthan Sivapakkiam | B21, 1/2, National housing Schme, Colombo - 10. |
| 86. Mrs. Ratnamyl Sathiyabaldevi | B30, 1/3, Soysapura Flats. Moratuwa. |
| 87. Mr. S. Sivaneswaran | Inuvil South, Chunnakam |
| 88. Mrs. Loganathan Rathidevi | B24, 1/1, Soysapura Flats. Moratuwa. |
| 89. Mr. S. Selvanathan | 27, 4/3, 1st Chappal lane, Colombo 06. |
| 90. Mrs. T. Ramachandran | 64/6, Raththotta Road, Kaluthawalai, Matale. |
| 91. Mrs. K. Benedict | 353/81, Vepamkulam, Mannar Road, Vavuniya. |
| 92. Mr. J. Kalaiselvan | 10. 7/10, 37th Lane. Colombo - 06. |
| 93. Mr. T. Sivagnanasundram | 39. 3/1, 33th Lane, Colombo - 06. |
| 94. Late Mr. S. Kandasamy | 7. Frazer Avenue, Dehiwala |
| 95. Mr. S. Gnanasoruban | Thaduvan Polikandy, V.V.T |
| 96. Mr. K. Uthayaraman | Co-op Street, Alaveddy Central, Alaveddy. |
| 97. Miss. Ravipriya Mahendran | 12. 1/6, Castle Lane. Colombo - 04. |
| 98. Mr. T. Tharmakulasingam | 14. 5/3, Arethusa Lane. Colombo - 06. |
| 99. Mr. T. Theivendran | 17. Ramakrishna Road. Colombo - 06. |
| 100. Mrs. Rajasingam Bharathy | 166. Mahinda Mawatha. Haweliya. Nuwara-eliya. |
| 101. Mrs. Sivakumar Selvaragini | Jayapress Junction. Alaveddy North. Alaveddy. |
| 102. Mr. K. Sivaruban | Ruban Kadai Alaveddy West. Alaveddy. |
| 103. Mrs. Ramanie Thavaraj | 27/4, Sri Saranankа Road. Kalubowila. Dehiwala |

| | | |
|---|---|---|
| 104 | Mr. Krishangar | Sathanatha Lane, Alaveddy Centre, Alaveddy |
| 105 | Mrs. Vimaladevi Nageswaran | Sathanatha Lane, Alaveddy Centre, Alaveddy |
| 106 | Mr.A. Thavakkumar | Muthaliyar Kovilady Alaveddy North, Alaveddy |
| 107 | Mr. R. Thanabalan | Germany |
| 108 | Mrs. Doreen Vanitha Joseph Ithayaraj | Alukkai, Alaveddy |
| 109 | Mr. Francis Navaratnam Jeron | Alukkai, Alaveddy |
| 110 | Mr. R. Thilakshan | Thampala, Alaveddy West, Alaveddy |
| 111 | Mr.Nageswary Thavendran | 24, Moor Road, Colombo 06. |
| 112 | Miss Sobana Kesavan | Alaveddy South, Alaveddy |
| 113 | V. Sivanathan | Hatton |

## நிர்வாக சபைக் கூட்டங்களுக்கு சிற்றுண்டி வழங்கி உதவி புரிந்தோர்.

1. திரு. செ. சற்குணம்
2. திரு. த. நந்தகுமார்
3. திருமதி. செ. ஜெயசீலன்
4. திருமதி. சிவானி புவிகரன்
5. திரு. கனகசபாதி நித்தியானந்தன்
6. திரு. கா.கிருபாகரன்
7. திரு. ந.யோகராஜா
8. திரு. அ.சிவயோகநாதன்
9. திரு. க.நித்தியானந்தம்
10. திருமதி. உ.காந்தரூபன்
11. திரு. இ.முனிஸ்வரன்.

# கல்லூரிக்கீதம்

கலைபயில் தருசிறுவர் குழமிக்
கலைவளர் பதி போற்றுவோம்

அளவை அருணோதயக் கல்லூரி
மலைவிளக்கென நிலைநின் றோங்க
வளர்மதியமும் கதிரும்போல
வளர்ந்து கலைகள் பொலிந்து தேங்க

(கலைபயில்)

ஆரியம் தமிழ் ஆத்ம ஞானம்
ஆங்கிலம் இசை கலை விஞ்ஞானம்
வீரியந் தரும் உடலின் பயிற்சி
விளங்கு மதனா லடைந்தோம் உயர்ச்சி

(கலைபயில்)

பிறி தோறுமே தொடரும் கல்விப்
பேற்றை மெக்கு அளித்த அன்னையுன்
திறனை நினைத்து தினமு முனது
சேவை செய்குவோம் மனதிலுவந்து

(கலைபயில்)

அருணா சலவேள் எடுத்தவோன்று
அசையா அசல மாகநின்று
அருணன் வாழும் ஊழிநின்று
வாழ்க வாழ்க வாழ்கவென்று

(கலைபயில்)